# தமிழர் கடல்

சிங்கள தேரவாத பௌத்தப் பேரினவாதம் மகாவம்ச மனநிலையைக் கருவூலமாகக் கொண்ட இன அழிப்புச் சித்தாந்தம் ஒன்றின் அடிப்படையில் இயங்குவது.

அதிலிருந்து தன்னைப் பாதுகாத்துக்கொள்வதற்காக மேற்கொள்ளப்பட்ட ஈழத்தமிழரின் தேசிய விடுதலைப் போராட்டம் சமயசார்பற்றது என்றவகையில் அதன் தார்மீக அடிப்படை மிகவும் கெட்டியானது.

அப்படியானதொரு போராட்டத்தின் மீது இழைக்கப்பட்ட சர்வதேச அநீதியின் உண்மைப் பரிமாணத்தை முழுமையாகப் புரிந்துகொள்ளும் போதுதான் ஈழத்தமிழர் தேசத்தின் (nation) இருப்புக் குறித்த உலக மானுடத்தின் எதிர்காலக் கடப்பாடு என்ன என்ற கேள்வி மேலெழும்.

இந்தக் கேள்வி உரப்பாக அனைத்துலகத் தளத்தில் எழுப்பப்படும் போதே ஈழத்தமிழர் தேசத்தின் விடுதலைக்கான அடுத்த கதவு திறக்கப்படும்.

மரபுவழி ஆயுதப் போராட்டமாகவும் மெய்நடப்பு அரசாகவும் சர்வதேச அனுசரணையுடன் பேசித் தீர்க்கப்பட வேண்டிய விவகாரமாகவும் முதிர்ச்சிகண்டிருந்த ஈழத்தமிழர் போராட்டத்தை, சர்வதேசச் சக்திகள் பலவற்றின் ஆதரவுடன் இன அழிப்புப் போர் ஒன்றுடாக இலங்கை அரசால் 2009 இல் துவம்சம் செய்வது சாத்தியமானது என்றால், இலங்கை அரசுக்கும் அப்பாற்பட்ட ஒரு பிரளயம் (paradigm) ஈழத்தமிழர் தேசத்துக்கு எதிராகச் சர்வதேச மட்டத்தில் ஏதோ ஒரு தேவைக்காக ஆழமாகப் போடப்பட்டிருக்கிறது என்பது தெளிவாகிறது.

இந்தப் பிரளயத்துக்கு இலங்கைத் தீவின் இந்துமகா சமுத்திரத்திலான கேந்திர அமைவிடமே மூலகாரணியாக இருக்கும்.

2002ம் ஆண்டு கைச்சாத்தான போர்நிறுத்த உடன்படிக்கையில், அதன் பின்னணியில் இருந்த மேற்கத்தைய மற்றும் இந்திய சக்திகள், கடல் தொடர்பான விடயங்களைத் தெளிவாக உள்ளடக்காது தவிர்த்திருந்தன. ஏனெனில், கடல் குறித்த விளக்கமான விபரங்களை ஒப்பந்தத்தில் நேரடியாகக் கையாண்டால் கடற்புலிகளின் இருப்பை ஏற்கவேண்டிய நிலை உருவாகிவிடும். அவ்வாறு கடற்புலிகள் வெளிப்படையாக உடன்படிக்கையில் ஏற்கப்படும் போது விடுதலைப்புலிகளை ஒரு அரசற்ற குழுவாக (non-state actor), அதாவது ஈழத்தமிழர் தேசத்துக்கு தனித்துவமான இறைமை (sovereignty) இல்லை என்பதாகச் சித்தரிக்கும் தமது நோக்கத்தை அது மேலும் சிக்கலாக்கிவிடும் என்று அந்தச் சக்திகள் கருதியிருக்கவேண்டும்.

ஆகவே கடல் விவகாரத்தை வரையறுக்கப்படாத ஒரு விடயமாகப் போர் நிறுத்த உடன்படிக்கை கையாள ஆரம்பித்தது.

அதேவேளை, போர்நிறுத்த உடன்படிக்கையானது இரண்டு தரப்புகளுக்கிடையே கைச்சாத்திடப்பட்டபோதே ஒரு தரப்பு மற்றைய தரப்பை அங்கீகரித்துவிடுகிறது என்ற ஓர் யதார்த்தம் உருவாகிவிட்டது. அதுவும் விடுதலைப்புலிகளின் படைகள் என்று அதில் குறிப்பிடப்பட்டபோது கடற்புலிகளும் அதற்குள் உள்ளடங்குவதால் புலிகளும் இந்த விடயத்தை ஆரம்பத்திலேயே சிக்கலாக்காமல் உடன்படிக்கையில் கைச்சாத்திட்டிருந்தனர்.

இந்தவகையில் கடல் தொடர்பான முரண்பாடுகள் தோன்றும்போது உடன்படிக்கையின் சரத்துக்களை விளங்கிக்கொண்டு நடைமுறையில் தீர்ப்பு வழங்கும் பொறுப்பு போர் நிறுத்தக் கண்காணிப்பாளர்களைப் போய்ச் சேர்ந்தது.

ஒரு தரப்பு மற்றைய தரப்புக்கெதிரான எந்தவிதமான வலிந்த தாக்குதல்களிலும் ஈடுபடக்கூடாது என்று உடன்படிக்கையின் சரத்து 1.2 தெரிவிக்கிறது. வலிந்த தாக்குதல் என்றால் என்ன என்பதையும் அது வரைவிலக்கணஞ் செய்கிறது. கடலில் வலிந்த தாக்குதல் தவிர்க்கப்படவேண்டும் என்றும் அந்தச் சரத்து குறிப்பிடுகிறது. அந்த வரைவில் ஆயுத இறக்குமதி என்ற விடயம் சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

அதேவேளை, இன்னுமொரு சரத்தான 1.3 இல் 'சிறிலங்கா'வின் ஆயுதப் படைகள் தமிழீழ விடுதலைப்புலிகள் மீதான வலிந்த தாக்குதல்களில் ஈடுபடாமல், 'சிறிலங்கா'வின் இறைமையையும் நில ஒருமைப்பாட்டையும் (territorial integrity) பாதுகாக்கும் தமது சட்டரீதியான நடவடிக்கைகளில் தொடர்ச்சியாக ஈடுபடுபவர் என்றும் குறிப்பிடுகிறது.

மேலுமொரு சரத்தான 1.7 இல் ஒரு தரப்பு தனது படைக்கலங்களை மற்றைய தரப்பின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் கொண்டு செல்லக்கூடாது என்று எழுதப்பட்டிருக்கிறதேயன்றி, சர்வதேசக் கடலில் இருந்து ஒரு தரப்பின் ஆளுகைப் பரப்புக்குள் படைக்கலங்களைக் குறித்த தரப்பு நகர்த்தக்கூடாது என்று சொல்லப்படவில்லை.

தமிழீழ விடுதலைப்புலிகள் என்ற பெயரிலேயே தமிழீழம் என்பது உள்ளடக்கப்பட்டிருக்கிறது. அவர்களைப் பொறுத்தவரை போர்நிறுத்த ஒப்பந்தம் 'சிறிலங்கா' அரசாங்கத்துடன் கைச்சாத்தாகியிருக்கிறது. இதன் மூலம் இலங்கைத்தீவின் இறைமை என்பது அன்றைய தென்னிலங்கைச் 'சிறிலங்கா' அரசின் இறைமை என்று ஒருபுறமும், விடுதலைப்புலிகள் அரசோச்சிய தமிழீழ மெய்நடப்பு அரசின் இறைமை என்று இன்னொருபுறமுமாக இரண்டு வேறுபட்டதாகிவிட்டது என்ற பொருள்கோடலையும் போர்நிறுத்த ஒப்பந்தம் மறைமுகமாக அங்கீகரிக்கிறது என்றும் தமிழர் தரப்பின் வாதம் அமைந்திருந்தது.

ஒப்பந்தங்களிலும் சர்வதேசச் சட்டங்களிலும் சர்ச்சைக்குரிய விடயங்களை கையாளுவதில் கடும் சிக்கல்கள் ஏற்படக்கூடிய வாய்ப்பிருந்தால் வேண்டுமென்றே அவற்றைத் தெளிவின்றி (ambiguity) வரையறுப்பதென்பது ஒரு தந்திரோபாயமாகக் கைக்கொள்ளப்படுவதுண்டு. இதனாலேயே போர்நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்படுதல் என்பதும் இராஜதந்திர ரீதியாகச் சாத்தியமாகியது.

போர்நிறுத்தத்தை விடுதலைப்புலிகளுடன் மேற்கொண்டுவிட்டு, வேறொரு அணியொன்றுக்குள் அவர்களையும் ஒரு பகுதியாக உள்ளடக்கி, இலங்கை ஒற்றையாட்சி அரசியல் நீரோட்டத்தில் கலந்துபோயிருந்த கட்சிகளையும் ஆயுதக்குழுக்களையும் ஒன்றிணைத்துப் பேச்சுவார்த்தை செய்யப்பட்டிருந்தால் தமிழர் தரப்பைத் தமிழ் இறைமைக்குரிய தனித்தரப்பாகக் கணிக்கப்படமுடியாத நிலையே தோன்றியிருக்கும்.

ஏனெனில் இலங்கை ஒற்றையாட்சி அரசின் அரசியற்சாசனத்தின் ஆறாம் சட்டத்திருத்ததுக்கு அமைவாக இலங்கையின் இறைமைக்கும் பிரதேச ஒருமைப்பாட்டுக்கும் சத்தியப்பிரமாணம் மேற்கொண்டிருக்கும் ஒரு தரப்பு தனித்துவமான தமிழ் இறைமையைப் பேச்சுவார்த்தை மேசையில் பிரதிநிதித்துவம் செய்வது பொருத்தமற்றது.

அவ்வாறான ஒரு திட்டம் சர்வதேசத் தரப்பால் வகுக்கப்பட்டிருந்தது.

சிக்கலை உணர்ந்த நிலையில் முன்னோடியாக மேற்கொள்ளப்பட்ட இராஜதந்திர நகர்வாகவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டது. அதன் மூலம் பெற்ற ஜனநாயக ஆணையோடு தமிழீழ விடுதலைப் புலிகளே பேச்சுவார்த்தை மேசையில்

தமிழ் மக்களின் ஏகபிரதிநிதியாக விளங்குவர் என்ற நிலைப்பாட்டைத் தமிழர் தரப்பு ஆரம்பத்திலேயே உறுதிசெய்துகொண்டது.

இது ஒரு புறம் இருக்க, 22 பெப்ரவரி 2002 இல் போர்நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்தாகிய பின்னர் வடதுருவ நாடுகளைச் சேர்ந்த போர்நிறுத்தக் கண்காணிப்பாளர்களைத் தீவினுள் அனுமதிக்க வேண்டிய நிலை தோன்றுகிறது. அவ்வாறான ஒரு மூன்றாம் தரப்பின் பிரசன்னத்தால் இலங்கைத் தீவின் இறைமை என்ற கோட்பாடு மேலும் பலவீனமாக்கப்பட்டுவிடும் என்ற எண்ணம் இறைமை குறித்த சட்டச் சிந்தனைகளில் திளைத்திருந்த சிங்களத் தரப்பிடையே ஏற்பட்டது. சர்வதேச சக்திகளிடமும் இதேவித சிந்தனை இருந்திருக்கலாம்.

இதனால், கொழும்பு அரசாங்கம் தனது இறைமைக்குரியது என்று தான் கருதிய (முழு இலங்கைத் தீவும்) பகுதிக்குள் போர்நிறுத்தக் கண்காணிப்பாளர்களை அனுமதிக்கமுன்னதாக இன்னோர் ஒப்பந்தம் ஒன்றை அவசர அவசரமாக முடிக்குரிய நோர்வே அரசாங்கத்துடன் இரு அரசுகளுக்கிடையான தனிவேறான ஓர் உடன்படிக்கையாகக் கைச்சாத்திட்டுக்கொண்டது. இதற்குச் சோமா உடன்படிக்கை (Status of Mission Agreement: SOMA) என்று பெயர்.

போர்நிறுத்த ஒப்பந்தத்துக்கு முழுமையாக உட்படாமல் வேறொருவிதமாக சோமா உடன்படிக்கை தன்னை நியாயப்படுத்தியது. நோர்வே அரசுக்கும் இலங்கை அரசுக்கும் இடையே 1986 ஆம் ஆண்டில் கைச்சாத்தாகியிருந்த அபிவிருத்தி ஒப்பந்தம் ஒன்றின் உப சரத்துக்கு ஒன்றுக்கு அமைவாகவே போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு இலங்கைத் தீவுக்குள் பிரவேசிப்பதாக சோமா உடன்படிக்கை சொல்லிக்கொண்டது.

அதேவேளை சோமா ஒப்பந்தத்தை விடுதலைப்புலிகளும் ஏற்றுக்கொள்வதாக ஓர் அதிகாரபூர்வ கடிதத்தை வழங்கவேண்டும் என்றும் அவர்கள் மீது நெருக்கடி ஏற்படுத்தப்பட்டது.

ஆனால், சோமா உடன்படிக்கையை அப்படியே ஏற்றுக்கொள்வதாகத் தமது கடிதத்தை விடுதலைப்புலிகள் வழங்கவில்லை. மாறாக, சோமா உடன்படிக்கையிலே எவ்விதமான பாதுகாப்பு ஒழுங்குகளை போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு உறுப்பினர்களுக்கு இலங்கை அரசு வழங்குகிறதோ அதே ஒழுங்குகளைத் தமது நியாயாதிக்க எல்லைக்குள் தாமும் வழங்குவதான ஒரு உறுதிமொழியை விடுதலைப்புலிகள் கடித மூலமாக நேரடியாக நோர்வேத் தரப்புக்கு வழங்கினார்கள்.

இலங்கையின் இறைமை என்ற கோட்பாடு சிதைந்துவிட்ட ஒன்று என்பதைப் போர் நிறுத்த ஒப்பந்தமே ஒத்துக்கொள்வதால் தமிழர் தரப்பு அதைச் சர்வதேச ரீதியில் எதிர்காலத்தில் தமிழ் இறைமைக்கான அங்கீகாரத்துக்கும் பயன்படுத்த வாய்ப்பிருக்கிறது என்பதை விளங்கிவைத்திருந்த வெளிச் சக்திகள் – நோர்வே உள்ளடங்கலாக – இலங்கை அரசு வேறுவிதமாகத் தனது இறைமையை வலுப்படுத்துவதற்கும் அகட்டுவதற்கும் சலுகைகளையும் மாற்று வழிகளையும் அபிவிருத்தி ஒப்பந்தங்கள் மூலம் வகுத்துக்கொடுத்தன.

இலங்கைத் தரப்பின் அரச இறைமை என்ற கோட்பாட்டைப் பின்னிப்பிணைக்கும் சட்டச் சொற்பிரயோகங்களுக்குள் விடுதலைப்புலிகளைத் தந்திரோபாயமாகச் சிக்கவைத்து, தம்மைத் தாமே ஓர் அரசற்ற தரப்பு என்று அவர்களையே ஒத்துக்கொள்ளவைக்கும் முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டன.

ஆயினும், தமிழர் இறைமையை இராஜதந்திர வழிகளில் சரணாகதியாக்கச்செய்யும் தந்திரோபாயத்துக்குள் மாட்டிக்கொள்ளாத வகையில் தமது நகர்வுகளை விடுதலைப்புலிகள் மேற்கொண்டனர் என்பது பலரும் அறிந்திராத ஒன்று.

அக்காலத்தில் எழுத்துமூலமாகப் பரிமாறப்பட்ட விடயங்களிற் சிலவற்றைப் பார்வையிடும் வாய்ப்பைக் கொண்டிருந்ததோடு, கொழும்பு, ஒஸ்லோ, இலண்டன், வாசிங்ரன் ஆகிய இடங்களில் நேரடியாகப் பிரசன்னமாகியிருந்து செயற்பட்டுக்கொண்டிருந்த சுயாதீனமான ஊடகம் என்ற வகையில் செய்திகளுக்குப் பின்னான செய்திகள் பற்றிய அறிவைத் தமிழ்நெற் ஆசிரியபீடம் கொண்டிருந்தது. அரச இறைமை என்ற விடயத்துடன் தொடர்புபட்டு விரிகின்ற விடயமாக கடல் தொடர்பான சிக்கல்கள் அமைந்திருந்ததைத் தொடர்ச்சியாக அக்காலத்தில் உணரமுடிந்தது.

பேச்சுவார்த்தை நடந்துகொண்டிருந்தபோதே விடுதலைப்புலிகளின் கப்பல்கள் கடலில் வெடிக்கும் நிலை ஏற்பட்டபோது நிலைமை நெருக்கடியாகியது.

ஆரம்பத்தில் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு கடல் அரச இறைமைக்கு உட்பட்டதாகக் கருதி கொழும்புக்குச் சார்பாகவே தீர்ப்புகளை வழங்கியது.

விடுதலைப்புலிகள் அது குறித்த கடும் ஆட்சேபத்தை இராஜதந்திர முறையில் பதிவுசெய்துகொண்டார்கள். போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு நடுநிலை பேணவேண்டிய நெருக்கடி நிலைக்குத் தள்ளப்பட்டது.

இதன் விளைவாக, கடலில் போர்க்கலங்களின் பயணிப்புத் தொடர்பாக வரையறை செய்யப்பட்ட ஓர் உடன்பாட்டை இரு தரப்புகளுக்கிடையேயும் எழுத்து மூலமாக ஏற்படுத்த போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு பகீரதப் பிரயத்தனங்களை மேற்கொண்டது.

இதற்கான நகல்கள் தயாரிக்கப்பட்டு இரு தரப்புகளுக்கிடையேயும் கருத்துப் பரிமாறல் மேற்கொள்ளப்பட்டு இறுதிக்கட்ட உடன்பாட்டுக்கான நிலையை நோக்கிப் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு நகரலாயிற்று.

இந்தக் கட்டத்தில் தான் விடுதலைப்புலிகளின் கப்பல் ஒன்று மீண்டும் அச்சுறுத்தப்படும் நிலை உருவாகியது. இதன்போது போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் தலைவராயிருந்த மேஜர் ஜெனரல் திறிக்வ தெல்லெப்ஸன் எடுத்த நிலைப்பாட்டை இலங்கை ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்க கடுமையாக விமர்சித்தார். தெல்லெப்ஸன் விடுதலைப்புலிகளுக்குச் சார்புநிலை எடுப்பதாகக் குற்றம் சுமத்தி, அவரைப் பொறுப்பில் இருந்து விலக்குமாறு நோர்வேப் பிரதமருக்கு அறிவுறுத்தி ஒரு கடிதத்தை 2003 ஒக்ரோபரில் சந்திரிக்கா வரைந்தார். இந்த இழுபறியால் கண்காணிப்புக்குழு தலைவரின்றிச் செயற்படவேண்டிய நிலைக்குச் சில மாதங்கள் தள்ளப்படடிருந்தது.

இலங்கைத் தரப்பின் தலைமைப் பேச்சுவார்த்தையாளரான பேராசிரியர் ஜீ.எல் பீரிசை விடவும் பேச்சுவார்த்தை அணியின் அதிமுக்கிய இராஜதந்திரியாக இன்னொரு அமைச்சர் திகழ்ந்தார். விக்கிலீக்ஸ் பின்னாளில் வெளிக்கொணர்ந்த பரம ரகசிய அமெரிக்க ஆவணங்கள் இதை எந்த ஒளிவு மறைவுமின்றி உறுதிப்படுத்துகின்றன.

அமெரிக்காவின் தலைநகரில் பிறந்து, அமெரிக்கப் பெண்மணியை மணந்து, அவர்மூலம் ஆழமான அமெரிக்க வலைப் பின்னலைக் கொண்டு, அமெரிக்கப் பிரஜையாகவும் விளங்குவதோடு அமெரிக்கத் தரப்பின் நம்பிக்கைக்குப் பாத்திரமானவராகவும் அப்போதைய இலங்கை அமைச்சரான மிலிந்த மொராகொட விளங்கினார் என்று அக்காலத்து அமெரிக்கத் தூதரான ஜெப்ரி லன்ஸ்ரேட் ஒரு கேபிளில் குறிப்பிட்டிருக்கிறார்.

இலங்கையின் இறைமையைப் பாதுகாத்து, இலங்கை இராணுவத்தின், குறிப்பாகக் கடற்படையின் பலத்தை மேலும் கெட்டியாக்கும் வகையில் சர்வதேச வலைப் பின்னல் (international safety-net) ஒன்றை இலங்கைக்கு உருவாக்கிக்கொடுக்கும் கைங்கரியத்தில் மொராகொட ஈடுபட்டிருந்தார்.

அதேவேளை அமெரிக்காவுக்கு சர்வதேச அரசியலில் அணிசேரா நாடுகள் (Non-Aligned Movement: NAM) என்ற அணி வில்லங்கமானதாக இருப்பதால், அதற்கு மாற்றான இன்னொரு அணியை இலங்கையின் முன்னெடுப்பொன்றூடாக உருவாக்கித்தருவதாகவும் மிலிந்த தனக்கு வாக்குக் கொடுத்திருந்ததாக அன்றைய அமெரிக்கத் தூதுவர் தனது இராஜாங்க அமைச்சுக்கு அனுப்பிவைத்த ரகசிய ஆவணத்தில் விளம்பியிருக்கிறார்.

இந்தச் சர்வதேச வலைப்பின்னலின் இராஜதந்திரியாகத் தன்னை வெளிப்படுத்திக்கொண்ட மிலிந்த மொராகொட விடுதலைப்புலிகள் இயக்கத்தின் தலைவருக்கும் அதன் தலைமைப் பேச்சுவார்த்தையாளருக்கும் இடையே முறுகல் நிலை ஏற்படவும் ஒரு கட்டத்தில் வழிவகுத்தவர். பிற்காலத்தில் கருணாவின் பிளவுக்கான சூழல் உருவாகுவதற்கு பேச்சுவார்த்தைப் பொறியே காரணமாகியது என்ற கருத்தையும் அவர் வெளியிட்டிருந்தமையும் இங்கு கவனிக்கவேண்டும். இவற்றை அவர் நேரடியாகச் செய்தார் என்று பார்ப்பதையும் விட, அமெரிக்கத் தலைநகரில் அவருக்குச் சொல்லப்பட்டதை அவர் செயற்படுத்தினார் என்றும் விளங்கிக்கொள்ளலாம். அது அமெரிக்க இராஜாங்கத் தரப்பாகத்தான் இருக்கவேண்டும் என்பதில்லை. பொதுவாகப் புவிசார் அரசியல் விவகாரங்களில் அமெரிக்க இராணுவத் தரப்பே முடிவெடுக்கும் இறுதித் தரப்பாக இருக்கும்.

பேச்சுவார்த்தைக் காலத்தில் நிதி ஊடாக இரண்டு தரப்பையும் இறுக்கமாகத் தமது ஒருங்கமைக்குப்புக்குள் கொண்டுவர அமெரிக்கா தலைமையிலான சக்திகள் முயன்றன. போரின் பாதிப்பில் இருந்து மீள்கட்டுமானம் செய்வதற்கு இரு தரப்பினரின் ஒத்துழைப்போடும் சர்வதேச நிதியைத் தருவதாக ஒஸ்லோவிலும் பின்னர் ரோக்கியோவிலும் சர்வதேசக் கொடையாளார் மாநாடுகள் (international donor conferences) ஒழுங்கு செய்யப்பட்டன.

இந்த நகர்வில், குறிப்பாக 2003 ஜூன் மாதத்தில் இடம்பெற்ற ரோக்கியோ மாநாட்டுக்கு முன்னர், இலங்கை அரச தரப்பின் இறைமைக்கு அதீத அங்கீகாரத்தை வழங்கி, தமிழர் தரப்பைச் சிறுமைப்படுத்தும் நகர்வொன்று சர்வதேச வலைப்பின்னல் ஊடாக மேற்கொள்ளப்படலாயிற்று.

அதேவேளை பெருமளவு நிதியை வழங்கி விடுதலைப்புலிகளை ஆயுதங்களைக் கைவிட வைக்கும் பொறிக்குள் தள்ள முடியுமா என்ற ஒரு விடயத்தையும் இந்த வலைப்பின்னல் திரைமறைவில் ஆராய்ந்தது.

குறிப்பாக, இந்த மாநாடு தொடர்பான ஆயத்தக் கூட்டமொன்றை அமெரிக்காவில் நடாத்தி (அங்கு விடுதலைப்புலிகள் மீதான தடை இருந்தது) அதற்குத் தமிழர் தரப்பை அழையாது நிகழ்ச்சிநிரல் தீட்டப்பட்டது. நடுநிலை சர்வதேசத் தளத்தில் தவறப்படுவதை விமர்சித்த விடுதலைப்புலிகளின் தலைமை ரோக்கியோ மாநாட்டில் கலந்துகொள்வதில்லை என்ற கொள்கைசார் முடிவை மேற்கொண்டது.

இந்த ரோக்கியோ மாநாடு விடுதலைப்புலிகளுக்கு மட்டுமல்ல, அனுசரணையாளராகச் செயற்பட்ட நோர்வேயையும் நேரடியாகக் கட்டுப்படுத்தும் ஒரு முறையாகவும் இருந்தது. இந்த ரோக்கியோ மாநாட்டை ஒழுங்கு செய்த இணைத்தலைமையாளர்களான (co-chairs) அமெரிக்கா, ஜப்பான், ஐரோப்பிய யூனியன், நோர்வே ஆகிய நான்கு தரப்புகள் ஒரு குழுவாக இயங்கி தாமே பேச்சுவார்த்தையை வழிநடத்தும் சர்வதேச சமூகத்தின் அதிகாரபூர்வ தரப்பு என்ற தோரணையில் செயற்பட ஆரம்பித்தன.

அதாவது போர்நிறுத்த ஒப்பந்தத்தில் காணப்படாத இணைத்தலைமை நாடுகள் என்ற சர்வதேசக் குழுமம் தானாக வந்து தலைமை வகிக்க ஆரம்பித்துவிட்டது. அதன் ஒரு அங்கமாக நோர்வேயும் மாறிவிட்டது.

இலங்கை அரசு தனது மத்திய வங்கிக்கூடாக நிதி வரவேண்டும் என்பதில் குறியாக இருந்தது. அவ்வாறு செய்வதன் மூலம் தனது இறைமையை விடுதலைப்புலிகளும் ஏற்றுக்கொள்வதாக அமையும் என்றும் நிதி தனது கட்டுப்பாட்டில் இருந்தால் சமதரப்பு என்பதற்கு அப்பாலான ஒரு மேல் நிலையைத் தான் எட்டிவிடலாம் என்றும் இலங்கை அரச தரப்புக் கருதியது.

நிதி விவகாரங்களில் இலங்கை அரசின் இறைமைக்குட்பட்ட மத்திய வங்கியூடாக நிதியூட்டத்தை நேரடியாக சர்வதேசத் தரப்புகள் மேற்கொள்ளக்கூடாதென்றும், இரண்டு தரப்புகளும் இணைந்த ஒரு கட்டுமானத்துக்கூடாக இணக்கம் எய்தப்பட்ட பின்னரே அடையாளப்படுத்தப்பட்ட வேலைத்திட்டங்களுக்கு நேரடியாக நிதியை வழங்கவேண்டும் என்றும் அதுவரை சேர்க்கப்படும் நிதி சர்வதேசத்தின் பொறுப்பில் இருக்கவேண்டும் என்றும் விடுதலைப்புலிகள் வலியுறுத்தினர். அதாவது, உலக வங்கி போன்ற ஒரு சர்வதேச நிறுவனமே நிதியின் பாதுகாப்பாளராகத் (custodian) தொடர்ச்சியாக இருக்கவேண்டும் என்பதே அவர்களின் நிலைப்பாடாக இருந்தது.

2004 டிசம்பரில் ஏற்பட்ட சுனாமிப் பேரவலத்தின் பின்னர் மீள்கட்டுமானம் தொடர்பான ஒரு பொதுக்கட்டமைப்பை ஏற்படுத்துவதற்கான உடன்படிக்கை ஒன்றை இரு தரப்புகளுக்குமிடையே செய்வதற்கான நோர்வேயின் மத்தியஸ்தத்தின் போதும் இதே சர்ச்சை பூதாகாரமாகக் கிளம்பியது.

ஆனாலும், இறுதியில் உலக வங்கி நிதியின் பாதுகாப்பாளராக இருக்கவேண்டும் என்றும் அதற்கு ஊடாகவே சர்வதேசத் தரப்புகள் நிதியை வழங்கவேண்டும் என்றும் பொதுக்கட்டுமானம் தொடர்பான இணக்கம் ஏற்பட்டது. கட்டுமான வேலையை நடைமுறைப்படுத்தும் நிறுவனத்திற்கு நிதி உலக வங்கியிலிருந்து நேரடியாக வழங்கப்படவேண்டும் என்றும் விடுதலைப்புலிகள் வலியுறுத்திய வகையிலேயே மிகுந்த நெருக்குவாரங்களுக்கு மத்தியில் ஒப்பந்தம் (Post-Tsunami Operation Management Structure: P-TOMS) கைச்சாத்தானது.

இந்த ஒப்பந்தத்தின் பிரகாரம் விடுதலைப்புலிகளுக்கு நிதி நேரடியாகச் செல்லாது. அதேபோல இலங்கை அரசின் இறைமைக் கட்டுப்பாட்டுக்குள்ளும் வைப்பாகாது. இரு தரப்புகளும் இணக்கம் கண்டபின்னர் அடையாளப்படுத்தப்பட்ட வேலைத்திட்டங்களுக்குரிய நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு அவ் வேலைத்திட்டங்களை நிறைவேற்றும் மூன்றாம் தரப்பு நிறுவனங்களுக்கு நிதி நேரடியாகச் சென்றடைய வேண்டும்.

அதிசயம் என்னவென்றால், இந்த பீ-ரொம்ஸ் ஒப்பந்தம் கைச்சாத்தாகிய அடுத்த கணமே அமெரிக்காவின் கொழும்புத் தூதரகம் ஓர் அறிக்கையை வெளியிடுகிறது. அதிலே, தாம் இதை வரவேற்பதாகவும், ஆனால் தமக்குச் சட்டச்சிக்கல் இருப்பதாகவும் அதனால் தாம் நிதிப் பங்களிப்புச் செய்யமுடியாதிருப்பதாகவும் குறிப்பிடப்பட்டது. இந்த அறிக்கையைத் தொடர்ந்து இலங்கையின் கடும்போக்குவாத ஜே.வி.பி கட்சி உயர் நீதிமன்றத்தில் வழக்கொன்றைத் தாக்கல் செய்து இந்த சுனாமி உடன்படிக்கை இலங்கையின் இறைமைக்கு எதிரானதென்று தீர்ப்புவழங்கச் செய்தது. இதனால் பொதுக்கட்டமைப்பு சாத்தியமாகவில்லை. ஆக, அமெரிக்காவின் அணுகுமுறையே பொதுக்கட்டமைப்பின் சாவுக்கான முக்கிய காரணமாயிருந்தது.

குறிப்பாக, ஏனைய இணைத்தலைமை நாடுகளின் கொழும்பு வதிவிடப் பிரதிநிதிகள் மற்றும் அமெரிக்க அணியைச் சார்ந்த உதவி நிறுவனங்கள் கூட அமெரிக்காவின் இந்த முடிவு குறித்து அதிர்ச்சியடைந்திருந்தார்கள்.

கடலும் இறைமையும் தொடர்பாக இலங்கை அரசும் அதைத் தம் கைக்குள் வளைத்துப்போட விரும்பிய வெளித் தரப்பினரும் வகுத்துக்கொண்ட அணுகுமுறையே

போரின் போக்கைத் தீர்மானித்ததே அன்றி, ராஜபக்ச அரசின் வருகை மட்டும் அல்ல.

பேச்சுவார்த்தைக் காலத்தில் ரணிலின் அரசாங்கத்தில் அங்கம் வகித்த மிலிந்த மொராகொட, மகிந்த ராஜபக்ச ஆட்சிக்கு வந்த பின்னர் கட்சி விட்டுக் கட்சி தாவி, அமைச்சர் பதவி கொடுக்கப்பட்டு மீண்டும் அமெரிக்கத் தொடர்புடனான சர்வதேச வலைப் பின்னல் தொடர்பான வேலைகளில் ஈடுபட்டார்.

பத்து வருடங்களின் பின்னர், இன்று கடல் மூலமான இலங்கையின் சர்வதேச விவகாரங்கள் குறித்த சிந்தனை மையம் ஒன்றை (Pathfinder Foundation) மிலிந்த இயக்கி வருகிறார். பெரும் நிதியோடு இலங்கை - சீன, அமெரிக்க - இலங்கை, மற்றும் இந்திய - இலங்கை விவகாரங்களில் நேரடியாகத் தன்னை ஈடுபடுத்தி இவர் அரச தரப்புக்கு அப்பாற்பட்ட தளத்தில் நின்று சமாந்தரமாகச் செயற்பட்டுவருகிறார்.

2019 ஈஸ்டர் ஞாயிறுத் தாக்குதலின் பின்னர், முன்னாள் அமெரிக்கத்தூதரான றொபார்ட் பிளேக்கை கொழும்புக்கு அழைத்து உரையாற்றவைத்தவரும் இவரே. அங்கு உரையாற்றிய பிளேக், போரின் போது கோத்தபாய ராஜபக்சே புலனாய்வு விவகாரங்களைத் திறம்பட ஒருங்கமைத்தார் என்ற கருத்தையும் பதிந்திருந்தார். அது மட்டுமல்ல, இலங்கை அரசு சீனாவையும் அமெரிக்காவையும் மற்றைய நாடுகளையும் ஒன்றுடனொன்று சீண்டி விடுவதன் மூலம் தனது காரியங்களைத் தொடர்ந்தும் சாதிக்கக்கூடிய ஓர் இடத்தில் இருக்கிறது என்ற மதியுரையையும் போர்க்காலத்தில் இலங்கைக்கான அமெரிக்கத் தூதராயிருந்த பிளேக் மீண்டும் வழங்கியிருக்கிறார். அமெரிக்காவுக்கும் இலங்கை அரசுக்கும் இடையான இராணுவ-இராணுவ நட்பு மிகவும் நெருக்கமாகியிருப்பதையிட்டும் அவர் புளகாங்கிதம் அடைவதாகத் தனது உரையில் குறிப்பிட்டார்.

தற்போது இலங்கையின் கடல் சார்ந்த நீலப் பொருளாதாரம் (Blue economy) பற்றி மிலிந்த மொராகொட அடிக்கடி பேசியும் செயற்பட்டும் வருகிறார்.

இவற்றையெல்லாம் வைத்துப்பார்க்கும் போது விக்கிலீக்ஸில் வெளிவராத பரமரகசியங்களோடு சம்பந்தப்பட்டிருந்த, இன்றும் சம்பந்தப்பட்டிருக்கக்கூடிய, கடல் சார்ந்த இலங்கையின் இறைமை குறித்த, குறிப்பாக இந்துமகா சமுத்திரத்தில் இலங்கைத் தீவின் கேந்திர முக்கியத்துவத்தை வைத்துக் காரியம் பண்ணுகின்ற ஒரு வலைப்பின்னலைக் கொண்டவராக மிலிந்த செயற்படுகிறார் அல்லது அவர் அவ்வாறு செயற்பட வைக்கப்படுகிறார் என்பது தெளிவாகிறது.

போர்நிறுத்தக் காலத்தின் பின் இன அழிப்புப் போர் உச்சமடைந்தபோது சர்வதேசக் கடற்பரப்பில், குறிப்பாக அவுஸ்திரேலிய, இந்தோனேசியக் கடற்பரப்பை அண்டி, மிகவும் ரகசியமாக 30-மாத காலத் தொடர் இராணுவ நடவடிக்கை ஒன்று இலங்கையின் கடற்படைத் தளபதியின் நேரடிக் கண்காணிப்பில் நடாத்தப்பட்டது. இதற்கு சாகர பலய (கடற் பலம்) என்று பெயரிடப்பட்டிருந்தது. இந்த நடவடிக்கைக்குத் தலைமை தாங்கும் தளபதியாக தமிழ்த் தகப்பனுக்கும் சிங்களத் தாய்க்கும் பிறந்த ட்ராவிஸ் லியாந்துரு சின்னையா என்பவர் இயங்கினார்.

முள்ளிவாய்க்காலை நோக்கி ஈழத்தமிழர்கள் இடம்பெயர்ந்து கொண்டிருக்கையில் கடலில் விடுதலைப்புலிகளுக்கு ஆயுதங்களைக் கொண்டுவர முயற்சித்த அனைத்துக் கப்பல்களையும் அமெரிக்காவால் மிக இரகசியமாக வழங்கப்பட்ட புலனாய்வுத் தகவலோடு குறிவைத்து அழித்த வேலைத்திட்டமே அது.

இதற்கு லியாந்துரு சின்னையா தலைமையிலான கடற்படைக் குழு பயன்படுத்தியது இந்தியாவிடம் இருந்து வாடகைக்கு அமர்த்தியிருந்த வாராகா என்ற விக்ரம் ரகக் கப்பலாகும் (இலங்கையின் கடற்படை முயற்சிகள் தொடர்பான மேலதிக விபரங்களுக்கு 18 நவம்பர் 2018 இல் வெளியான தமிழ்நெற் கட்டுரை இலக்கம் 39255 ஐப் பார்வையிடுக).

லியாந்துரு சின்னையாவுக்கு சில சிக்கல்கள் பின்னாளில் ஏற்பட்டபோது அவரைக் கொழும்பில் இருக்கும் அமெரிக்கத் தூதரகம் வேலைக்கு அமர்த்தியது. பின்னர் இலங்கையில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டதும் அவர் மீண்டும் கடற்படையில் இணைக்கப்பட்டார். இலங்கையின் கடற்படைத்தளபதியாகவும் அவர் சில கிழமைகள் இயங்கினார்.

ஆக, ஒபாமா காலத்தில் மேற்கொள்ளப்பட்ட அமெரிக்காவின் முடிவுகளும், அதன் அரச இயந்திரத் தொடர்புகளும் ஈழத்தமிழர் தேச நலனுக்கு எதிராகவே அமைந்திருந்தன என்பது பலமாகவே நிரூபணமாகிறது.

இந்திய அரசின் அநீதியான அணுகுமுறையைச் சரிவர அறிந்துவைத்திருக்கும் ஈழத்தமிழ் மக்கள் அமெரிக்கா குறித்த சில முக்கியமான உண்மைகளை உணராத நிலை காணப்படுகிறது. இதை 2009 முடிவிலாவது அதிகாரபூர்வமாக விடுதலைப்புலிகளின் தலைமை வெளிப்படுத்தியிருந்தால் தெளிவு ஏற்பட்டிருக்கும். ஆயினும் இது குறித்த அறிவூட்டலைத் தமிழ் மக்களிடையே 2009 இற்குப் பின்னான காலத்திலாவது செய்வதற்குத் தமிழ் மொழியிலான ஊடகங்களும் அந்த ஊடகங்களில் தலைகாட்டவல்ல கல்விமான்களும் தவறிவிட்டனர்.

எந்தளவு மக்கள் அழிந்தாலும் பரவாயில்லை, புலிகள் அழிக்கப்படவேண்டியவர்கள் என்று 2005ம் ஆண்டு ஜூன் மாதம் 30ம் திகதியன்று அப்போதைய அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் (வெளிநாட்டமைச்சர்) ஹிலறி கிளின்ரனுக்கு ஆலோசனை வழங்கப்பட்டிருந்தமை பின்னாளில் வெளிப்பட்டிருக்கும் மின்னஞ்சல் ஆதாரங்கள் ஊடாகத் தெரியவருகிறது. இந்த ஆலோசனை உலக வங்கியினதும், சர்வதேச நாணய நிதியத்தினதும் (International Monetary Fund: IMF) நிபுணர்களை மேற்கோள் காட்டி ஹிலறி கிளின்ரனின் ஆன்மீக ஆலோசகரான பேர்ண் ஸ்ரைடர் என்பவரால் வழங்கப்பட்டிருந்தது.

ஸ்ரைடர் என்பவர் ஹிலறியின் தேர்தல் வெற்றிகளுக்குக் காரணமாயிருந்தவர். அவருக்கான உரைகளை எழுதியவர். ஆனால், ஸ்ரைடர் இளம் பெண்களோடு தவறாக நடக்கமுற்பட்டதை அறிந்திருந்தும் பதவியில் இருந்து அவரை நீக்காது 2008ம் ஆண்டுக் காலப்பகுதியில் அவரைப் பாதுகாத்துவந்ததாக கடந்த வருடம் எழுந்த மீ-ரூ சர்ச்சைகளில் ஸ்ரைடர் பற்றிய சர்ச்சைகள் தோன்றியதும் தனது தவறான முடிவுக்கு ஹிலறி வருத்தம் தெரிவித்திருக்கிறார். ஆனால், ஈழத்தமிழர்களின் பல உயிர்கள் அழிந்தாலும் பரவாயில்லை புலிகள் அழிந்துபோகவேண்டும் என்று ஸ்ரைடர் வழங்கிய ஆலோசனையைத் தான் பின்பற்றிய பாரதூரமான குற்றத்துக்கு ஹிலறி எப்போது மன்னிப்புக் கேட்கப் போகிறார்? அவரை மன்னிப்புக்கோர வைக்கவேண்டியது அமெரிக்காவில் வாழும் ஈழத்தமிழர்களின் கடமை மட்டுமல்ல அதுவே எதிர்காலத்துக்குத் தேவையான இராஜதந்திரம் என்பதையும் விளங்கிக்கொள்ளவேண்டும்.

இலங்கைத் தீவின் கேந்திர அமைவிடத்தைக் கண்வைத்த நிலையில் அங்கு ஒரே ஒரு இராணுவம் தான் இருக்கவேண்டும், ஓர் அரசு தான் இருக்கவேண்டும் என்ற அணுகுமுறையில் அமெரிக்கா செயற்பட்டதாக உலக சமாதானக் கற்கையின் தந்தை என்று கருதப்படுகிற ஜோகான் கால்துங் தமிழ்நெற்றுடனான ஒரு வீடியோ பேட்டியில் தெரிவித்திருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. இலங்கை அரசு மகாவம்ச மனநிலைக்கு ஆட்பட்டிருக்கிறதென்பதையும் இறுதிப் போரில் நடந்தது இன அழிப்புத்தான் என்றும் 2014 ஏப்ரல் 06ம் திகதி வெளியாகிய பேட்டியில் அவர் குறிப்பாகச் சுட்டிக்காட்டியிருக்கிறார் (தமிழ்நெற் கட்டுரை இலக்கம் 37155. YouTube வீடியோ: XneurN5ZjSk).

இவற்றை வைத்துப் பார்க்கும் போது இலங்கைத் தீவில் ஒருமையன ஓர் இராணுவம் மட்டும் தான் இருக்கவேண்டும், அதனோடு தான் தமது கடற்படை பயிற்சியில்

ஈடுபடவேண்டும் என்ற தெரிவு அமெரிக்காவில் பாதுகாப்பு மட்டமொன்றில் ஒபாமாவின் காலத்தில் எடுக்கப்பட்டிருக்கிறது என்பது புலனாகிறது. இதற்கு அமெரிக்க அரச, அரசு சாரா இயந்திரத்தினரும் வலைப்பின்னலாகச் செயற்பட்டிருக்கின்றனர்.

ஈழத்தமிழர்களின் போராட்டத்தையும் தேசக் கட்டுமானத்தையும் இன அழிப்புப் போர் ஒன்றின் மூலமாக நசுக்குவதற்குக் கடலே பிரதான காரணி என்பதையும், இலங்கைப் படைகளை விட வெளியில் இருந்து வழங்கப்பட்ட புலனாய்வுத் தகவல்கள் இதற்குக் காரணமாயின என்பதையும், இவை யாரால் ஏன் வழங்கப்பட்டன என்பதை உய்த்துணர்ந்திருந்தாலே சர்வதேச நீதி என்ற விவகாரத்தைக்கூட ஈழத்தமிழர்கள் பொருத்தமான முறையில் அணுகமுடியும்.

• • •

ஒரு புறம் சமாதானப் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றுக்கொண்டிருக்க, மறுபுறம் நோர்வேயின் அபிவிருத்தி உதவி அமைப்பான நோராட் (NORAD) என்ற நிறுவனம் இலங்கை அரசின் கடல் இறைமை சார்ந்த வேலைத்திட்டம் ஒன்றுக்கு அளப்பரிய நிதியுதவியை வழங்கியது.

பொதுவாக, கடலைத் தொடும் ஒரு நாட்டுக்கு கரையில் இருந்து கடலுக்குள் இருநூறு கடல்மைல் தூர விஸ்தீரணத்தில் அதன் இறைமைக்குட்பட்ட தனித்துவப் பொருளாதார வலையம் (Exclusive Economic Zone) சர்வதேசக் கடல் விதிகளின் பிரகாரம் உரித்தானதாகிறது (United Nations Convention on the Law of the Sea: UNCLOS).

ஆனால், கொழும்பு அரசு இதை 75,000 சதுர மைல் விஸ்தீரணத்தால் தீவின் தென்கிழக்காக அதிகரிக்கலாம் என்றும், அப்படிச் செய்யும் போது அங்கு கிடைக்கக் கூடிய எண்ணெய் வளத்தால் பெரும் பொருளாதாரப் பலத்தை இலங்கை அரசு ஈட்டிக்கொள்ளலாம் என்றும் இதற்குச் சர்வதேச கடற் சட்ட விதிகளில் காணப்படுகின்ற ஒரு சரத்து தரும் நுண்ணிய வாய்ப்பைப் பயன்படுத்தலாம் என்றும் இலங்கைத் தரப்புக்கு போர்நிறுத்த ஒப்பந்த காலத்தில் வெளிச்சக்திகள் ஓர் ஆலோசனையை வழங்கின.

பல நாடுகளில் இருந்தும் இதற்கான திறமைசாலிகளை ஒருங்கிணைத்து ஐ.நா வின் கண்டத்திட்டு தொடர்பான நிறுவனத்திடம் (UN Commission on the Limits of the Continental Shelf: CLCS) இலங்கை சார்பாக ஒரு விண்ணப்பத்தைக் கையளிப்பதற்கான இந்த வேலைத்திட்டத்திற்கு 2003ம் ஆண்டு தொடங்கி 2008 வரை நோர்வே இரண்டு மில்லியன் அமெரிக்க டொலர்களை நோராட் நிறுவனத்தின் இலவச உதவியாகச் செலவிட்டிருக்கிறது.

மேலும் 5.2 மில்லியன் டொலர்கள் வரையான கலப்புக் கடன் வரம்பு ஒன்றையும் கடலில் அளவீடுகளை மேற்கொள்வதற்கு ஏதுவாக நோராட் பிரேரித்திருந்தது.

இந்த வேலைத்திட்டத்தை சிங்களவர்களை மட்டுமே கொண்ட ஓர் உள்நாட்டுக் குழு நிர்வகித்தது. அமெரிக்கா, பிரித்தானியா, நெதர்லாந்து, நியூசிலாந்து, ஜேர்மனி, ரஸ்யா ஆகிய நாடுகளைச் சேர்ந்த கடற்திட்டு விற்பன்னர்கள் பலரைக் கலந்தாலோசித்து, கடலில் பல பரிமாண நில அதிர்வு அளவீடுகளை மேற்கொண்டு, உரிய விண்ணப்பத்தை ஐ.நாவுக்கு 13ம் திகதி மே 2009 என்ற கால எல்லைக்கு முன்னதாக இந்தக் குழு அனுப்பிவைத்திருக்கிறது (மேலதிக விபரங்களுக்கு 24 நவம்பர் 2018 இல் தமிழ்நெற்றில் வெளியான 39261ம் இலக்கக் கட்டுரையைப் பார்க்க).

இந்த விண்ணப்பம் மூலம் இலங்கை அரசின் இறைமைக்குரிய புலத்தின் பரப்பு அதன் நிலப்பரப்பை விடவும் 25 மடங்கால் அதிகரிக்கவிருக்கிறது. விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்பட்டால் இலங்கையின் இறைமைப் புலத்தில் கடலே பெரும்பகுதியாகிவிடும்.

அருகில் உள்ள வேறு நாடுகளுக்கு கடலில் இல்லாத அளவு பாரிய விஸ்தீரணமுடைய இறைமைப் புலம் இலங்கைக்கு வழங்கப்படுவதற்கான அறிவையும் பணத்தையும் தொழிநுட்பத்தையும் வெளிச்சக்திகள் தமது கேந்திர இராணுவ மற்றும் பொருளாதார நலன்களை ஒட்டி இலங்கைக்கு வழங்கியிருந்தன.

நலன்கள் குறித்த பேரம்பேசலில் 2009 வரை தமிழர் தரப்பு நியாயமான, இராஜதந்திர உறவுகளைப் பேணும் வகையில் நடந்துகொண்டது என்பதற்கு அமெரிக்காவில் இருந்து செயற்படும் விடுதலைப்புலிகளின் சட்ட ஆலோசகர் விசுவநாதன் உருத்திரகுமாரன் சாட்சியாகிறார்.

மிலிந்த மொராகொட வழங்கிய கவர்ச்சியான சில வாக்குறுதிகளுக்கு ஒப்பான சில வாக்குறுதிகளை தென்னாசிய விவகாரங்களுக்குப் பொறுப்பான அமெரிக்க உதவி இராஜாங்க அமைச்சரான கிறிஸ்டீனா றொக்கா போன்றோருக்கு சட்டத்தரணி உருத்திரகுமாரனும் தமிழர் தரப்புச் சார்பாக வழங்கியிருந்தார்.

இராஜதந்திர நகர்வுகளுக்கு எதுவித குறையும் இல்லாத அளவுக்கு தமிழர் தரப்புச் செயற்பட்டது. அதுமட்டுமல்ல, மேற்குலகுக்குச் சாதகமான புலம்பெயர் ஈழத்தமிழர் சமுதாயத்தைத் தம்மகத்தே கொண்டிருந்தபோதும், அதிலும் குறிப்பாக ஈழத்தமிழர்கள் இந்த நாடுகளின் பல்லினச் சமூகங்களுக்கு முன்மாதிரியான ஒருங்கிசைவோடு (integration) வாழ்ந்தபோதும், மேற்குலக நாடுகளுக்குத் தென்னிலங்கை அரசுடனான புவி சார் அரசியலில் (geopolitics) தமிழர் நலன்களைப் பலியிடுவதே உசிதமான அணுகுமுறையாகப் பட்டிருக்கிறதென்பது கசப்பான உண்மை.

• • •

2009 இற்குப் பின்னரான சூழலில், சர்வதேச நீதிப்பரப்பில், ஈழத்தமிழர் தமது செல்நெறியை எவ்வாறு வகுத்துக்கொள்ளவேண்டும் என்பது குறித்த தெளிவானதொரு பார்வை தமிழ் மக்களிடம் பரவலாக வலுப்பெறவேண்டும்.

குறிப்பாக இரண்டு முனைகளில் தமிழர்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தின் நீதிப்பரிமாணம் குவியப்படுத்தப்படவேண்டும்.

இலங்கை அரசு இன அழிப்பில் ஈடுபட்டது (State Responsibility for genocide) மட்டுமல்ல, அது தொடர்ந்தும் கட்டமைக்கப்பட்ட இன அழிப்பை மேற்கொள்கிறது. எனவே ஈழத்தமிழர் தேசத்தைப் பாதுகாக்கவேண்டிய உலக மானுடத்தின் தார்மீகப் பொறுப்பைச் சுட்டுவதாகவும் சர்வதேசச் சமூகம் தமிழர் தேசத்தை இன அழிப்பிலிருந்து காக்கத் தவறியமை (Responsibility to Protect: R2P) தொடர்பான பொறுப்புக்கூறலை மையப்படுத்தியதாகவும் இந்த அறத்தின் ஒரு முனை இருக்கவேண்டும்.

இதன் அடுத்த முனை, வெளியக சுயநிர்ணய உரிமை என்ற தார்ப்பரியத்துடனான தமிழர் தேசத்தின் இறைமை குறித்தது (Right of self-determination and distinct sovereignty). இதை ஈழத் தமிழர் இறைமைக் கொள்கை என்றும் சொல்லலாம் (கட்டுரை இலக்கம் 34650).

இந்த இரண்டு அற முனைகளும் ஒரு நாணயத்தின் இரண்டு பக்கங்கள் போன்றவை.

இந்த நாணயமே எமது அறமாக நாம் பயணிக்கவேண்டுமாயின் இலங்கைத் தீவின் உள்ளிருந்து மேற்கொள்ளப்படும் தமிழர் அரசியலும் இந்த அறத் தளத்தை மறுதலிக்காத கருத்தியற் தளத்தில் சஞ்சரிக்க வேண்டும். ஆறாம் சட்டத்திருத்தம் தடுத்தாலும் அதை நழுவிச் சஞ்சரிக்கத் தெரிந்திருக்கவேண்டும்.

இதற்கு வரலாற்று அறிவில் இருந்து சர்வதேச நீதி குறித்த அறிவு வரை தேடல், கற்றல், மீளாய்வுசெய்தல், கருத்துருவாக்கம் என்று அறிவு தழுவிச் செயற்படுகின்ற நிலை அவசியமாகிறது. ஆங்கிலம், தமிழ் என்ற இரு மொழிப்புலமையும் அவசியமாகிறது.

2009 இன் பின்னர் வழுவிச் செல்வோரும் திரிபுவாதிகளும் அறிவின்பாற்பட்டே செயற்படுகின்றனர். அதாவது தமிழ்த் தேசத்தை மறுதலிக்கும் அறிவைக் கொண்டு அவர்கள் இயங்குகின்றனர்.

மதியை மதியால் வெல்லவேண்டும்.

எனவே ஈழத்தமிழரிடையே அறிவீனம் எங்கே இருக்கிறது, அது எவ்வாறு உருக்கொண்டிருக்கிறது என்பதைச் செயற்பாட்டாளர்களும் மக்களும் அறிந்துவைத்திருக்கவேண்டும்.

கட்டமைக்கப்பட்ட இன அழிப்பில் இருந்து ஒரு தேசத்தைப் பாதுகாக்கவேண்டிய உலக மானுடத்தின் தார்மீகப் பொறுப்பைச் சுட்டுவதாகவும் சர்வதேசச் சமூகம் தமிழர் தேசத்தை இன அழிப்பிலிருந்து காக்கத் தவறியமை தொடர்பான பொறுப்புக்கூறலை மையப்படுத்தியதாகவும் மேலே குறிப்பிட்ட
அறத்தின் இருமுனைகளும் இருக்கவேண்டும்.

ஆனால், இதற்கு எதிர்மாறாக இலங்கை அரசும் தமிழர் தரப்பும்
ஆகிய இருதரப்புகளுக்குமே பொறுப்புக்கூறலுக்கு உரியவை என்ற ஒரு மாயச் சிந்தனையைத் தமிழர் தலையில் சர்வதேச அரசியல் சுமத்தியிருக்கிறது. இதுவே ஜெனீவாவில் மழுங்கடிக்கப்பட்ட அறத்தின் முனை என்பதைப்
புரிந்துகொண்டு இனிவரும் காலத்திலாவது முதலாவது முனை
கூர்மைப்படுத்தப்படவேண்டும்.

வெளிநாட்டு அரச, அரச சார்பற்ற நிறுவனங்களின் நிதியில் இயங்கும் எந்தத் தமிழர் நிறுவனமும் ஈழத்தமிழர் தேசத்தின் நலன்களுக்கான அறநிலையை முன்னெடுக்கும் திராணியற்றதாக மட்டுமல்ல, அதன் செல்நெறியைச் சரியாகத் தீர்மானிப்பதைச் சாதுரியமாகத் தடுத்துவிடும் பொறியாகவும் அமைந்துவிடும். இவ்வாறான நிறுவனங்களும் கட்டமைப்புகளும் இழைக்கும் தவறு தமிழ்த்தேசியக் கூட்டமைப்புச் செய்யும் தவறை விடவும் ஆபத்தானது.

எடுப்பார் கைப்பிள்ளைகளாக வெளிச்சக்திகளின் அறிவுரைகளையும் நிதியுதவிகளையும் துணையாகக் கொண்டியங்காமல் தன்கையே தனக்குதவி என்று எமது மக்களில் மட்டும் தங்கியிருக்கும் ஆற்றலோடு, அறிவையும் அறத்தையும் செயலாக்கத்தையும் தன்னகத்தே கொண்ட மக்கள்மயப்பட்ட இயக்கம் ஒன்றே இன்றைய காலத்தின் தேவை.

• • •

கடந்த பத்து வருடங்களில் இந்து சமுத்திரம் உலக இராணுவ, பொருளாதார, புவிசார் அரசியலின் முக்கிய ஆடுகளமாக உருவெடுத்திருக்கிறது.

சீனாவின் பட்டை ஒன்று பாதை ஒன்று (One Road One Belt) எனும் உலக வரலாற்றிலேயே பெரும் நிதியுடன் 2013 இல் இருந்து 2049 வரை திட்டமிடப்பட்டிருக்கும் பாரிய பொருளாதாரத்திட்டம், சீனா உலகின் வல்லரசாக்கப் போகிறது என்பதோடு, அதன் படு வேகமான இராணுவ வளர்ச்சி, அமெரிக்காவின் பிரதான எதிரி சீனா என்ற நிலையை உருவாக்கியிருக்கிறது.

அரசுகளைத் தன்வயம் மடக்கி, அரசற்ற தேசங்களையும் மக்களையும் பற்றிய எந்தவித கரிசனையும் இன்றி, சீனாவின் பட்டையும் பாதையும் பெரும் சர்ச்சைகளைக் கிளப்பிவிட்டிருக்கிறது. இதை ஆபத்தென்று கொள்வதா அல்லது வாய்ப்பென்று கொள்வதா என்று தெரியாமல் பல நாடுகள் தவிக்கின்றன.

பாகிஸ்தான் சீனாவின் மிக நெருங்கிய நட்புச் சக்தியாகியிருக்கிறது. சீன வயப்பட்டுத் தத்தளித்துக்கொண்டிருந்த மாலைதீவு இறுதியாக இந்திய-அமெரிக்க வயப்பட்டிருக்கிறது. தென்னிலங்கை சீனாவா அமெரிக்காவா, இரண்டும் கலந்த கலவையா என்று குழம்பிக்கொண்டிருக்கிறது.

இதனால், முன்னெப்போதும் இல்லாதவாறு சீன அமெரிக்க முரண்பாடு கூர்ப்படைந்திருக்கிறது. இதன் பிரதான களமே இந்தோ பசிபிக் கடலாகும்.

இந்தச் சூழலில் இந்தியா அமெரிக்காவின் பாரிய பாதுகாப்புப் பங்காளியாகியிருக்கிறது (major strategic partner). அமெரிக்க பசுபிக் இராணுவத் தலைமை (US Pacific Command: USPACOM) இந்தோ பசுபிக் இராணுவத் தலைமையாகியிருக்கிறது (US Indo-Pacific Command: USINDOPACOM). அமெரிக்கா, ஜப்பான், அவுஸ்திரேலியா, இந்தியா என்ற நாற்கூட்டு பாதுகாப்புப் உரையாடல் (Quadrilateral Security Dialogue: QUAD) கடலில் தொழிநுட்ப ரீதியில் ஒருங்கிசைவுக்குள்ளாக்கப்பட்டிருக்கிறது.

இந்தியாவுடன் அமெரிக்காவின் இராணுவ ஒப்பந்தங்களும் உறவுகளும் அண்மையில் வலுப்பட்டுள்ளன.

ஒரு காலத்தில் இந்தியாவுடனான இராணுவ உறவு பலப்பட முன்னர், இலங்கைத் தீவுடன் அமெரிக்கா நேரடியான பாதுகாப்பு ஒப்பந்தம் ஒன்றை கோத்தபாய ராஜபக்சவுடன் 2007 இல் கைச்சாத்திட்டிருந்தது. இந்த ஒப்பந்தம் 2017 இல் காலாவதியாகியிருக்கிறது. ஆனால், புதிய ஒப்பந்தம் போடப்படாமலேயே கொழும்பு, திருமலை, அம்பாந்தோட்டை என்று அமெரிக்கப் போர்க்கப்பல்கள் வந்துசெல்கின்றன. சிலவேளை, நிரந்தரமான ஆட்சி ஒன்று ஏற்படட்டும் என்று அமெரிக்க இராணுவத் தரப்பு கருதியிருக்கக்கூடும்.

ஒபாமா காலத்தில் இந்தியாவைத் தன்பக்கம் இழுப்பதற்காகச் சீண்டும் நோக்கில் இலங்கையில் அதீத கவனத்தை அமெரிக்கா செலுத்தியது. ஆனால், ட்ரம்ப் காலத்தில் இந்தியாவே அதன் பிரதான பிராந்தியக் காவலாளியாகிவிட்ட நிலையில் இலங்கை அரசின் ஆழ்கடல் கடற்படைக் கனவு மட்டுப்படுத்தப்படுகிறது.

அதேபோல சீனாவையும் அமெரிக்காவையும் இந்தியாவையும் தூண்டிவிட்டு ஆழ்கடற் கலங்களை அனைத்துச் சக்திகளிடமிருந்தும் பெற்று இந்தியாவுக்கு நிகராக இல்லாதுவிட்டாலும் முக்கியத்துவம் வாய்ந்த ஆழ் கடற் படை ஒன்றைக் கட்டவேண்டும் என்ற இலங்கைக் அரசின் முயற்சிகள் எவ்வளவுதூரம் சாத்தியமாகும் என்பது கேள்விக்குறியே.

இருப்பினும் போரில் தேர்ச்சிபெற்றதாகக் கருதப்படும் ஓர் இராணுவத்தை வைத்திருக்கும் இலங்கை அரசின் படைகளைத் தமது தேவைக்கு எப்படிப் பயன்படுத்தலாம் என்ற கவனம் வெளிச்சக்திகளுக்கு இருக்கவே செய்யும்.

விடுதலைப்புலிகளின் கடற்புலிகளுடன் போர் புரிந்த காலத்தில்கூட இலங்கைக் கடற்படையிடம் கரையோரப்படை (marines) இருந்ததில்லை. 2016 செப்ரம்பர் தொடக்கம் கரையோரப்படை ஆரம்பிக்கப்பட்டு அமெரிக்க கடற்படையின் பயிற்றுவிப்புடன் வளர்க்கப்பட்டு வருகிறது. இதன் தலைமையகம் சம்பூரில் அமைந்துள்ள விதுரா முகாம் ஆகும்.

இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் பின்னிணைப்பில் கடற்தளங்கள் குறித்து ஏற்படுத்தப்பட்ட இந்திய நலன் சார்ந்த சரத்துக்கு உட்படவே தற்போது இலங்கையின் துறைமுகங்களுக்கு இந்தியாவின் பாரிய பாதுகாப்பு நண்பனான அமெரிக்கா வந்து செல்ல முடிகிறது.

அமெரிக்க வெளியுறவு (இராஜாங்க அமைச்சு) வட்டாரங்கள் ரணில் அரசாங்கத்தை ஆதரிப்பது போலத் தென்பட்டாலும், எதிரணியான கோத்தபாய ராஜபக்சவுடன் அமெரிக்கப் பாதுகாப்புத் தரப்பு புரிந்துணர்வோடு இருப்பதற்கான வாய்ப்புகளும் நிறையவே இருக்கின்றன.

அரசியலில் நிரந்தரமான நண்பர்கள் அல்ல நலன்களே உள்ளன என்ற வகையில் அடுத்ததாக இலங்கைத் தீவில் ஆட்சியமைக்கும் ஆற்றல் எவருக்கிருக்கிறதோ அவருடன் அமெரிக்கா மட்டுமல்ல எல்லாத் தரப்புகளும் நல்லுறவைப் பேண விழையும் என்பது கண்கூடு.

இந்த நிலையில், ஈழத்தமிழராகிய நாம் எந்த நிலைப்பாட்டைக் கடைப்பிடிக்கவேண்டும்?

எமது கோரிக்கைகளை அங்கீகரிக்காத எவருடனும் நாம் அணிசேரமாட்டோம், ஈழத்தமிழர் தமது வாக்குகளை எந்தத் தென்னிலங்கை ஆட்சியாளருக்கும் வழங்கப் போவதில்லை என்று 2005 இல் எடுக்கப்பட்ட நிலைப்பாட்டுக்கு ஒத்த ஒரு நிலைப்பாட்டைக் கைக்கொண்டால் மாத்திரமே வெளிச்சக்திகளுடன் பேரம் பேசுவதற்கான சூழல் உருவாகும். ஆனால் அதற்குரிய அரசியற்துணிவு ஈழத்தமிழர்களின் அரசியற் தலைவர்களாகத் தம்மைக் காட்டிக்கொள்ளும் எவருக்கும் இருப்பதாகத் தெரியவில்லை. இதற்கே மக்கள் அறிவு பெற்றவர்களாய் இருப்பது அவசியமாகிறது.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு பேரம் பேசல் எதையும் மேற்கொள்ளாது கண் மூடித்தனமான தனது ஆதரவை ரணில் அரசாங்கத்துக்கு வழங்கிவருவதை எந்த வகையிலும் நியாயப்படுத்தமுடியாது.

● ● ●

2009 இற்குப் பின்னர் தமிழகத்தில் இருந்து வெளிப்படும் தமிழர் கடல் என்ற சொற்பிரயோகம் கூட மேலெழுந்தவாரியான கச்சதீவுக் கோரிக்கையாகவும் முள்ளிவாய்க்கால் இன அழிப்பு நினைவேந்தலின் போது விளக்குகள் காட்டப்படுகின்ற ஒரு திசையாகவும் மட்டுமே சுருங்கிவிடுகிறது.

அது மட்டுமல்ல, தேசம் என்ற கருத்தியலுக்கு முற்பட்ட மன்னராட்சிக் காலத்துக் கடல் வணிக, பேரரசுப் பழம் பெருமைகளை மட்டுமே பேசிப் பேசித் தம்மை ஆசுவாசப் படுத்திக்கொள்ளும் மாநாடுகளுக்கும் வரட்டுக் கௌரவங்களுக்கும் ஒரு குறைச்சலும் இல்லை.

அறிவுபூர்வமான அணுகுமுறை ஒன்றுக்கு உணர்வுபூர்வமான வெளிப்பாடுகள் உந்துதல் ஆக அமையவேண்டுமே அன்றி, வெறும் உணர்வு வெளிப்பாடாக மட்டும் வெளிப்படும் உந்தல்கள் செல்லாக்காசுக்கு ஒப்பானவை.

கடற் பரிமாணத்தில் தமிழர் நலனுக்கு எதிரான செயற்பாடே தமிழ்நாட்டில் நடந்தேறியிருக்கிறது.

இதுவரை காலமும் இலங்கையில் வெளிநாட்டு நேரடி முதலீடாக (Foreign Direct Investment) ஒரு தனியார் நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்ட அதிகூடிய முதலீட்டை அண்மையில் தமிழகத்தின் திராவிட முன்னேற்றக்கட்சியின் அரசியல்வாதியும் தொழிலதிபருமானா சுவாமிக்கண்ணு கவுண்டர் ஜெகத்ரட்சகன் என்பவரின் குடும்ப நிறுவனம் அம்பாந்தோட்டையில் மேற்கொண்டிருக்கிறது.

இது நடந்து ஒரு சில கிழமைகளுக்குள் சீனாவால் 99 வருட வாடகைக்கு அமர்த்தப்பட்டுள்ள அம்பாந்தோட்டை துறைமுகத்துக்குள் அமெரிக்கக் கடற்படைப் போர்க்கப்பல் வருகை தந்து கடற்படைப் பயிற்சியில் ஈடுபட்டதை இங்கு உன்னிப்பாக நோக்கவேண்டும்.

அதாவது, சீனாவினால் கையகப்படுத்தப்பட்ட துறைமுகத்தை அண்டி, தமிழ் முதலீடு ஒன்று செய்யப்பட்ட பின்னான புதிய சூழலில் அமெரிக்கா பிரவேசிக்கிறதாம்.

அமெரிக்கப் போர்க்கப்பல் அம்பாந்தோட்டையில் கூட்டுப்பயிற்சியில் ஈடுபட்டிருக்கும் அதே நேரத்தில், உயிர்த்தஞாயிறன்று இஸ்லாமியவாதிகள் மனிதக்குண்டாக வெடிக்கவைக்கப்பட்டு அதீதமாகத் தமிழ்க் கிறிஸ்தவர்களும் வெளிநாட்டவர்களும் குறிவைக்கப்படுகின்றனர்.

ஜெகத்ரட்சகனின் குடும்ப நிறுவனத்தின் அம்பாந்தோட்டை முதலீடும், அங்கு அமெரிக்க போர்க்கப்பலின் பயிற்சியும், தீவின் மேற்கிலும் கிழக்கிலும் இஸ்லாமியவாதிகளின் தொடர் மனிதக்குண்டுகளும் ஒரே காலத்தில் நடந்தேறுவது வெளித்தலையீடில்லாத எழுந்தமானமான நிகழ்தகவா என்ற கேள்வி எழுகிறது.

இலங்கைத் தீவுக்குள் அடிப்படைவாத மதவாதம் அனைத்துத் தரப்புகள் மத்தியிலும் தீவிரப்படுத்தப்படுவதற்கும், பயங்கரத் தாக்குதல்கள் திடுதிப்பென்று மேற்கொள்ளப்படுவதற்கும் வெளிச்சக்திகள் முனைப்புக்காட்டுவதற்கும் இத்தீவு இந்துமாகடலில் வகிக்கும் கேந்திர முக்கியத்துவமே காரணமாகிறது.

இந்தக் கட்டுரையின் ஆரம்பப் பந்தியில் சொல்லப்பட்ட சமயசார்பற்ற தமிழ்த்தேசம் என்ற கெட்டியான தார்மீக அடிப்படையை ஈழத்தமிழர்கள் மேலும் பலப்படுத்தவேண்டிய தருணம் இது.

ஈழத்தமிழர், தமிழ்நாட்டவர் மத்தியில் பெருங்கடலில் எமது தேசங்களின் அமைவிடத்தை வைத்துச் சிந்திக்கும் ஒரு புதிய தலைமுறை இனியாவது செய்ற்பாட்டை ஆரம்பிக்கவேண்டும்.

பாக்கு நீரிணையில் இலங்கைக் கடற்படையால் தமிழக மீனவர்கள் பலியாக்கப்படுவதும் தாக்கப்படுவதுமான ஆபத்தான சூழ்நிலையை அரசுகளுக்கு அப்பாற்பட்ட வழிமுறைகளில் தீர்க்க இந்தப் புதிய செயற்பாட்டாளர்கள் முற்படவேண்டும். இதற்கும் அறிவூட்டலே அடிப்படையான தேவையாகிறது.

• • •

ஈழத்தமிழர் தேசத்தின் மீது திட்டமிட்டு மேற்கொள்ளப்படும் கட்டமைக்கப்பட்ட இன அழிப்பு நடவடிக்கையின் சூட்சுமக் காரணியும் நீண்ட வடக்குக் கிழக்கின் கடற்கரையே.

இலங்கைத் தீவின் கடற்கரையின் பெரியதொரு பாகம் வடக்கு கிழக்கு

மாகாணங்களில் இருப்பதால், இந்த நிலையை மாற்றி தீவிலிருக்கும் மாகாணங்கள் அனைத்துக்கும் கடல் எல்லை வருமாறு அமைக்கவேண்டும் என்ற சிந்தனை நெடுங்காலமாக சிங்களத் தரப்புகளிடையே காணப்படுகிறது.

தவிரவும், வட கிழக்குக் கடலூடாகவே பௌத்தம் தீவுக்கு வந்ததாகவும், அதனால் அது சிங்கள இறைமைக்குள்ளாகவேண்டும் என்ற சிந்தனையும் தேரவாத பௌத்த வட்டாரங்களில் ஊறியிருக்கிறது.

தமிழ் பேசும் மக்களின் மாகாணங்களாக வடக்கும் கிழக்கும் இணைவதைத் தடுக்கும் இலங்கை அரசு, கடல் என்று வரும் போது தனது கடற்படையின் கிழக்குத் தலைமையின் கடற் பிராந்தியத்தை வடக்கையும் கிழக்கையும் ஒன்றிணைத்தே பார்க்கிறது. கிழக்குக் கரைதான் (Eastern Naval Area: ENA) கடற்படையின் அதிகூடிய தளங்கள் இருக்கும் பகுதி. குறைந்தது 13 பெரியளவிலான கடற்படைத்தளங்களை இது கொண்டிருக்கிறது.

அதேவேளை மன்னாரில் முசலியின் முள்ளிக்குளத்தில் தொடங்கி, மன்னார்த் தீவின் இரு மருங்கையும் ஊடறுத்து, வன்னிப் பெருநிலத்தின் மேற்குக்கரை, நாச்சிக்குடா ஊடாக யாழ் தீவகத்தை ஆட்கொண்டு இலங்கைத் தீவின் வடதொங்கல் முனையான சக்கோடை தொடக்கம் வடமராட்சி கிழக்கு, சாலை ஊடாக கரை துறைப்பற்றின் அனைத்து முக்கிய புள்ளிகளையும் குறிவைக்கிறது கொழும்பை மையப்படுத்திய சர்வதேசப் பிணைச்சலுடனான கட்டடமைப்பு இன அழிப்பு. யாழ் நகரை அண்மித்த வாவி கூட இதற்கு விதிவிலக்கல்ல.

கிழக்கில் கொக்குளாயில் இருந்து, புல்மோட்டை ஊடாகத் திருமலையை மையப்படுத்தி, சம்பூர் தொட்டு, இலங்கைத்துறை, வாகரை என்று அறுகம்பை வரை இதே அணுகுமுறை நீண்டு செல்கிறது.

கடற்கரையோடான ஈழத்தமிழர், தமிழ் பேசும் மக்களுக்களின் புலனுக்கே புலப்படாத வகையில் பாரிய சர்வதேசப் பரிமாணங்களுடான கட்டமைப்பு இன அழிப்பு நிகழ்ச்சிநிரல் ஒன்று சத்தம் சந்தடியின்றி நிறைவேற்றப்படுகிறது.

வடக்கு கிழக்குக் கரையோரத்தில் கடலோர இயற்கைப் பாதுகாப்பு என்ற போர்வையில் பாரிய வெளிநாட்டு உதவிகளைச் சிங்களவர்களை மாத்திரமே செயற்குழுக்களாகக் கொண்ட தென்னிலங்கை நிறுவனங்கள் ஊடாக வழங்கப்பட்டு கரையோரப் பொருண்மியம் சிங்கள மயமாக்கலுக்குள்ளாகுவது எப்படி நடக்கிறது என்பது வடக்கு கிழக்கில் இருக்கும் மீனவ அமைப்புகளுக்கோ இதர மக்கள் கட்டமைப்புகளுக்கோ தெரியவருவதில்லை.

இதற்கும் மேலாக, கொழும்பு-திருகோணமலை பொருண்மியத் தாழ்வாரம் (Colombo-Trincomalee Economic Corridor) என்ற திட்டத்துக்கூடாக இது நகரங்களையும் இணைத்து திருமலைத் துறைமுகத்தை முழுமையாகச் சிங்களமயமாக்கிவிடும் அபிவிருத்தித் திட்டமொன்றை, ரணில் அரசாங்கம் திட்டமிட்டிருக்கிறது.

முன்னர் ராஜபக்ச அரசாங்கம் இதையே வேறு வடிவில், திருமலையின் மூதூர் கிழக்கின் சம்பூரை மையப்படுத்தித் திட்டமிட்டது.

அரசாங்கங்கள் மாறும் போது கட்டமைப்பு இன அழிப்பின் வடிவங்கள் மாறும் ஆனால் அடிப்படை நிகழ்ச்சிநிரல் கொழும்பை மையப்படுத்தியே இருக்கும் என்பதற்கு இது ஓர் உதாரணம்.

ரணில் அரசாங்கத்தின் இந்த திருமலை - கொழும்பு அபிவிருத்தியில் மன்னாரையும் இணைத்துப் பார்க்கவேண்டும் என்று இந்தியா விரும்புகிறது. இதனால்,

மடு போன்ற தமிழ்க் கத்தோலிக்க மையங்களையும் கொழும்பு மயமாக்கி, சிங்கள மயமாக்கலை மன்னாரை நோக்கியும் விஸ்தரிக்க இலங்கை அரசு திட்டமிட்டிருக்கிறது. கத்தோலிக்கத் தமிழ்ச் திருச்சபையினருக்கு இதன் ஆழமான பரிமாணம் புரிந்திருக்கிறதா என்பது தெரியவில்லை.

திருகோணமலையையும் கொழும்பையும் பொருண்மியத் தாழ்வாரம இணைக்கும் அதேவேளை, அநுராதபுரம் பொலநறுவையில் மகாவலி வலையம் விவசாய உற்பத்தியைப் பெருக்கி அநுராதபுர சிங்கள பௌத்த ஆட்சியை மீண்டும் 'ரஜரட்ட'வில் நிறுவி, தமிழர் தாயகம் என்ற கோட்பாட்டையே அடியோடு தகர்த்துவிடவேண்டும் என்ற மனநிலையோடுதான் எல்லைகளிலும் கரையோரக் குன்றுகளிலும் பௌத்த சிலைகளும், ஆலயங்களும், தூபிகளும் நிறுவப்படுவதை நாம் விளங்கிக்கொள்ளவேண்டும்.

முள்ளிவாய்க்காலில் நடந்தேறிய இன அழிப்பை விட ஆபத்தானது ஈழத்தமிழர் தேசத்தின் இருப்பையே இல்லாதொழிக்கும் கட்டமைப்பு இன அழிப்பு என்பதை அறிவு ரீதியாக, ஆதார ரீதியாக மக்கள் மத்தியில் எடுத்துச் சென்று முழுமையான புரிதல் ஒன்று ஏற்படுத்தப்பட்டால் தான் இந்தப் போக்கை முறியடிப்பதற்கான தார்மீகப் பலத்தை ஈழத்தமிழர் தேசம் பெற்றுக்கொள்ளமுடியும்.

சர்வதேச அநீதியைத் தட்டிக்கேட்டு கட்டமைப்பு இன அழிப்பைத் தடுத்து நிறுத்தும் வகையில் தமிழர் தரப்பு சுயாதீனமாகச் செயற்படாது விடின், தமிழர் தாயகம் என்ற கோட்பாடே சிதைவுறும்.

கட்டமைப்பு இன அழிப்பைத் தடுத்துநிறுத்த கடல், கடலோரம் குறித்த ஒன்றிணைந்த பார்வை தமிழர்களிடமும் தமிழ்பேசும் முஸ்லிம்களிடமும் வலுப்பெறவேண்டும்.

• • •

முடிக்குரிய அரசர்களும் பேரரசுகளும் தமது ஆட்புலத்துக் குடிகளின் இறைமையைத் தத்தெடுத்துக் கோலோச்சிக் கொண்டிருந்த மன்னராட்சிக்காலம் 17ம் நூற்றாண்டோடு முடிவுக்குவர ஆரம்பித்தபோது, ஜேர்மனியின் வெஸ்ட்பேலியாவில் (Westphalia) தற்காலத்துக்குரிய இறைமை என்ற கோட்பாடு 1648 இல் பிறப்பாக்கம் பெறுகிறது. இது அரச இறைமை (state sovereignty) என்றும் அழைக்கப்படுகிறது. தேச அரசு (nation-state) என்பது இதன் அடிப்படை அலகு.

தேசம் என்பது ஒரு மக்களும் (மக்கள் என்பது இங்கு ஒருமை என்பதை நோக்குக) அவர்தம் பிறப்புரிமைக்கான புலங்களும் இணைகிறபோது உருவெடுக்கிறது.

ஒரு தேசத்தின் அடிப்படையாக அதன் மரபுவழித் தாய்ப்புலம் (homeland/historical habitat) அமைகிறது.

தாய்ப்புலம் என்பது மண்ணும் அதன் மேலான வானமும் மட்டுமன்றி கடலும் சேர்ந்த ஒரு புலமாக அமையும்போது, அதிலும் குறிப்பாக நான்காவது பரிமாணமாக பிரக்ஞைபெற்ற மக்கள் என்பதும் இணைகின்ற போது நாற்பரிமாணத் தேசமாக அது பரிணமிக்கின்றது.

ஈழத்தமிழர் தேசத்தின் பரிமாணங்களிலே கடல் முக்கியமானது.

இந்தத் தேசத்தின் மீது மேற்கொள்ளப்பட்ட இன அழிப்புக்கும் தொடர்ந்துகொண்டிருக்கும் கட்டமைக்கப்பட்ட இன அழிப்புக்கும் கடலில் இலங்கைத் தீவின் கேந்திர அமைவிடமே காரணி என்பதை ஏற்கனவே இக்கட்டுரை

விளக்கியிருக்கிறது.

ஒரு தேசம் தனது இறைமையை அமைதி விழியில் உறுதிப்படுத்திக்கொள்ள முயல்கையில் அது மறுக்கப்பட்டால் தேச விடுதலைப் போராட்டம் வெடிக்கிறது.

இவ்வாறு எழுச்சிபெறும் ஒரு தேசத்தின் இறைமை மெய்நிகர் நிலையில் (virtual nation) இருந்து மெய்நிலைக்கு நகர்த்தப்படுவதான பொறிமுறையே தேசிய விடுதலைப் போராட்டம் என்பதன் விஞ்ஞானம்.

மெய்நிகர் நிலையிலிருந்து மெய்நடப்பு (de-facto) நிலைக்குச் சென்று பேரம் பேசுவதன் மூலம் வெஸ்ட்பேலியன் இறைமையின் மெய்நிலையை ஒரு தேசம் உறுதிப்படுத்திக்கொள்ளும்போது அது சுதந்திரமடைந்த தேசமாகிறது.

இராணுவ பலத்துடன் தாயகப் புலத்தின் கணிசமான பகுதிகளை ஆளுகை செய்தபோது மெய்நடப்பு இறைமையை ஈழத்தமிழர்கள் கொண்டிருந்தார்கள்.

ஆனால், தாயகத்துக்குள் மெய்நடப்பு அரசை மீண்டும் கட்டியெழுப்பும் சூழல் இல்லாத 2009 இற்குப் பின்னான நிலையில் வேறு வழிகளில் அதை அடைய முடியுமா என்ற கேள்விக்கான விஞ்ஞான விடைதேடல் முள்ளிவாய்க்காலுக்குப் பின்னான காலத்தில் ஈழத்தமிழர்களின் செல்நெறியைத் தீர்மானிக்கவேண்டும்.

மேலே குறிப்பிட்ட நான்கு மெய்ப்பரிமாணங்களுக்கும் அப்பால் ஐந்தாவது மெய்நிகர்ப் பரிமாணம் ஒன்றையும் சில தேசங்கள் கொண்டிருக்கின்றன. ஈழத்தமிழர் அவ்வாறான ஒரு தேசம்.

மேலெழுந்தவாரியாக புலம்பெயர் தமிழர் என்ற பரிமாணமாக அதை நோக்காது ‘புலம் கடந்த ஈழத்தமிழர் வெளி’ என்ற பிரக்ஞையோடு அது அணுகப்படவேண்டும்.

புலம் கடந்த ஈழத்தமிழர் வெளி என்பது தனியே கடலுக்கு அப்பாலுள்ள மக்களின் சமூக, பண்பாட்டு, பொருளாதார வெளி மட்டுமல்ல.

மெய்நடப்பு அரசு அழிக்கப்பட்டாலும், மெய்நடப்பு இறைமையாக அது புலம் கடந்த ஈழத்தமிழர் வெளியில் செதுக்கப்படுகின்றபோது மீண்டும் ஒரு மெய்நடப்பு நிலை ஈழத்தமிழர் தேசத்துக்குப் புதிய பரிமாணத்தில் உருவாகிறது. உலகமயமாக்கல் சூழலில் இந்தப் புலம் கடந்த மெய்நடப்புநிலை வலுவான ஒரு தாக்கத்தைச் செலுத்தமுடியும்.

2009 இல் இன அழிப்பினால் முழுமையாகத் துவம்சம் செய்யப்பட்ட ஈழத்தமிழர்களின் மெய்நடப்பு அரசின் பிம்பங்களைத் தக்கவைத்து, அவற்றுக்குப் புதிய பொருள் தந்து, தேசப் பிரக்ஞைக்கு உரு மட்டுமன்றிச் செயலும் தருகின்ற மெய்நிகர், மெய்நடப்பு வெளியாக அது செதுக்கப்படவேண்டும்.

இந்தச் செதுக்கல் கடந்த பத்து வருடங்களில் சரியாகச் செய்யப்படவில்லை.

இந்த ஐந்தாவது பரிமாணம், ஏனைய நான்கு பரிமாணங்களின் தாக்கத்தையும் பெருக்குகின்ற ஒன்று மட்டுமல்ல, அந்தப் பரிமாணங்கள் இயங்குநிலையின்றி இருக்கும் தறுவாயில் தானே மேலெழுந்து மீளுறுதிசெய்யும் (reinvigorating) பரிமாணமும் ஆகும்.

ஆகவே தமிழர் கடல் குறித்த பிரக்ஞை புலம் பெயர் பரிமாணத்தால் சர்வதேசத் தளத்தில் முன்னெடுக்கப்படவேண்டும்.

தமிழர் கடல் என்பது ஈழத்தமிழர் தேசத்தின் ஒரு பரிமாணமாக மட்டுமல்ல, தமிழ்நாடு

என்ற தமிழ்த் தேசத்தினதும், இந்தியப் பெருங்கடலின் மற்றைய கரையோர நாடுகளில் தொட்டம் தொட்டமாக வாழக்கூடிய தமிழர்கள் உள்ளடங்கிய தமிழ் கூறும் உலகத்தை வியாபித்துத் தொடுகின்ற பரிமாணம் என்பதையும் இங்கு கவனத்தில் கொள்ள வேண்டும்.

இந்த வகையில் தமிழர் கடல் என்பதன் விஞ்ஞானம் தமிழகத்திலும் அதற்கு அப்பாலும் கருவூன்றவேண்டும்.

ஈழத்தமிழர் புலம் பெயர் வெளி இந்த விஞ்ஞானத்தைத் தமிழகத்துக்கும் உரிய முறையில் உணர்த்தவேண்டும்.

தேசக் கட்டலுக்காக பல்லாயிரக்கணக்கான உயிர்களைக் கொடுத்துப் போராடிய ஒரு தேசம் ஈழத்தமிழர் தேசம் என்பதை மறந்துவிடாமல் தனது வழிகாட்டிப் பொறுப்பை வேறு இடங்களில் அடைவு வைத்துவிடாது தாயகமும் புலம் பெயர் ஈழத்தமிழர் வெளியும் இயங்கவேண்டும்.

• • •

வெஸ்ட்பேலியாவில் தேசம் என்ற தற்கால உலக ஒழுங்கின் அடிப்படை உதயமானபோது, நாம் காலனித்துவ ஆட்சிக்கு உட்பட்டிருந்தோம்.

நல்லூரில் பறிக்கப்பட்ட மன்னர் காலத்து இறைமை மீண்டும் 1948 இல் தமிழருக்குக ஜனநாயக இறைமையாக, தனித் தேசமாக அணுகப்பட்டுத் திருப்பிக் கொடுக்கப்படவில்லை.

காலனித்துவத்தின் முடிவில், எமக்கான தேசத்தை சுயமாக நாம் கட்டுவதற்கான ஒரு ஜனநாயக வழிமுறையை அங்கீகரிக்காது சிலோன் என்ற தேசத்தைக் காலனித்துவம் கட்டி எம்மீது திணித்தது.

திருகோணமலை மற்றும் இலங்கைத் தீவின் அமைவிடம் இரண்டாம் உலகப் போரின் போது தென்கிழக்காசியாவுக்கான போருக்கான கட்டுப்பாட்டுத் தலைமையாகுமளவுக்குப் பிரித்தானியாவுக்கு முக்கியத்துவமானதாக இருந்தது. தளபதி மவுன்ட் பட்டன் (Lord Louis Mountbatten) இற்கும் டி.எஸ் சேனாநாயக்காவுக்கும் இருந்த நெருக்கமும் ஆய்வுக்குரியவை.

தனது புவிசார் அரசியல் தேவைகளுக்காக தமிழர் முன்வைத்த சமன்பாடுகளைப் பிரித்தானியா நிராகரித்தது.

சிங்களத் தேசப் பிரக்ஞையைத் தனக்குத் தேவையான கருவியாக்கியது காலனித்துவம்.

கேந்திர முக்கியத்துவம் கருதியே பிரித்தானியா இத் தீவின் இறைமையைத் தனது முடிக்குள் 1972 வரை வைத்துக்கொண்டது.

பிரித்தானிய தேசிய ஆவணக்காப்பகத்தில் இருந்து கிடைக்கும் அரச இரகசிய ஆவணங்கள் இதைத் தெளிவாக உறுதிப்படுத்துகின்றன.

இது பற்றிய மூல ஆவணங்களிற் சிலவற்றை ஆதாரபூர்வமாக உள்ளடக்கிய ஒரு விளக்கக்கட்டுரை ஒன்று தமிழ்நெற்றில் 2013 டிசம்பரில் 04ம் திகதியன்று வரையப்பட்டது (கட்டுரை இலக்கம் 36867).

இது குறித்து பிரித்தானியாவுக்கு இருக்கும் பொறுப்புக்கூறல் என்ன என்ற கேள்வி பிரித்தானியாவில் வதியும் ஈழத்தமிழர்களால் முன்னெடுக்கப்படவேண்டிய ஒன்று.

இந்த ஆதாரங்களைப் படித்து விவாதிப்பதோடு, இதைப்போன்ற வேறு ஆதாரங்களையும் வெளிக்கொண்டுவரவேண்டிய பொறுப்பு ஆங்கில மொழியில் தேர்ச்சிபெற்ற எமது கல்விமான்களைச் சார்ந்தது.

வேறு சக்திகளால் வகுக்கப்பட்ட நிகழ்ச்சிநிரலுக்குள் இயக்கப்படும் பல்கலைக்கழகங்களில் வேலை புரியும் நிர்ப்பந்தங்களுக்குள் இருக்கும் தமிழ்க் கல்விமான்களே எம்மத்தியில் அதிகம். இவர்கள் இதைச் செய்யத்தயங்குவர். வேறு நாடுகளின் அரச அரச சார்பற்ற உதவிச் சம்பள ஒழுங்குகள் ஊடாகத் தமது கல்வியைத் தொடருபவர்களாலும் இதைச் சரிவரச் செய்ய இயலாது. இவர்களின் ஆய்வுகள் பெரும்பாலும் வெளிச்சக்திகளுக்கு எது தேவையோ அதற்காகவே கட்டமைக்கப்பட்டிருக்கும்.

ஆகவே, தமிழ் மக்களின் சொந்த நிதிப்பலத்தில் தமிழ்த்தேசத்தின் செல்நெறிக்கான ஆராய்ச்சிகள் செய்யப்படவேண்டும்.

இதற்குப் புலம் பெயர் ஈழத் தமிழ் வெளியில் பல்கலைக்கழகத்துக்கு ஒப்பான நிறுவனங்களை உருவாக்க எம்மவர் முன்வருவார்களா? அப்படி முன்வந்தாலும், இவ்வாறு அமைக்கப்படும் நிறுவனமயமாக்கலையே தமக்குச் சார்பாக மாற்ற வெளிச்சக்திகள் முயற்சிக்கும் போது அதற்குப் பலிக்கடா ஆகாது எமது நிறுவனங்கள் தமது சுயாதீனத்தன்மையை உறுதிப்படுத்திக்கொள்ளும் முறையில் வெளிப்படைத் தன்மையோடு இயங்கும் வகையில் கட்டமைக்கப்படவேண்டும்.

கேள்விகள் எவ்வாறு அமையினும், தமிழர் கடல் என்பது வெறும் சுலோகமாக அமைந்துவிடமால் மெய்யான, மெய்நிகரான சமகாலச் செயற்பாடுகளின் பிணைப்புக்கும், தூரநோக்குடனான எதிர்காலத் திட்டமிடலுக்கும் ஈழத்தமிழர், தமிழ் நாட்டவர், புலம் கடந்த ஈழத்தமிழர் வெளி மற்றும் இந்து சமுத்திரப் பிராந்தியத் தமிழரின் பிரக்ஞையாக அது முதலில் செதுக்கப்படவேண்டும்.

சுட்டெரித்த சர்வதேச சக்திகளின் நெற்றிக்கண்களை நோக்கி கடலை மையப்படுத்திச் சிந்திக்கும் ஈழத்தமிழ் நக்கீரர்கள் அறிவுரீதியாகக் கேள்வி எழுப்பத் தயாராகட்டும். அப்போது தான் மீண்டும் ஒரு மெய்நடப்பு நிலை உருவாகும். விளைவாக விடுதலைக் கதவுகள் நிச்சயம் திறக்கும்.

கட்டுரையில் மேற்கோள் காட்டப்பட்டுள்ள இணைப்புகள்:

https://www.tamilnet.com/art.html?catid=79&artid=34650
https://www.tamilnet.com/art.html?catid=79&artid=36867
https://www.tamilnet.com/art.html?catid=79&artid=37155
https://www.tamilnet.com/art.html?catid=79&artid=39255
https://www.tamilnet.com/art.html?catid=79&artid=39261

படங்களுக்கான விளக்கம்:

(1) பிரித்தானிய காலனித்துவ காலத்தின் இறுதிப்பகுதியில் இலங்கைத் தீவுக்குக் கடலூடான அஞ்சல் மார்க்கங்களைக் காட்டும் வரைபடம்
(2) இலங்கைத் தீவின் தென் கிழக்கிலிருந்தான கண்டத்திட்டின் மேற்பரப்பு. பட மூலம்: National Ocean Affairs Committee (NOAC) – economynext.com
(3) இலங்கை அரசாங்கம் பெருப்பிக்க விரும்பி ஐ.நா.வுக்கு விண்ணப்பித்துள்ள தனித்துவமான பொருண்மிய வலையம். இது அங்கீகரிக்கப்பட்டால் இலங்கையின் இறைமைப் புலம் 25 மடங்கால் அதிகரிக்கும். இலங்கைத் தீவின் தரைப்பரப்பை விட 25 மடங்கு அதிகமான

விஸ்தீரணம் இதற்குள் உள்ளடங்கும். படமூலம்: Daily News
(4) இலங்கைக் கடற்படையின் கிழக்குக் கட்டளைப் பிராந்தியம் வடக்கு மாகாணத்தின் கிழக்குக் கடலையும் கிழக்கு மாகாணத்தின் கடலையும் உள்ளடக்குகிறது
(5) திருகோணமலை-கொழும்பு பொருண்மியத் தாழ்வாரம் (Trincomalaee-Colombo Economic Corridor) படமூலம்: Presentation by ADB's Director General for South Asia Region Hun Kim in 2017
(6) சீனாவின் பட்டை ஒன்று - பாதை ஒன்று (One Road One Belt / Belt and Road Initiative) படமூலம்: beltandroad.hktdc.com